මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
MINISTRY OF FINANCE AND MASS MEDIA

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය - මුදල් / அலுவலகம் - நிதி / Office - Finance: (+94)-11-2484500, (+94)-11-2484600, (+94)-11-2484700
ෆැක්ස් - මුදල් / பெக்ஸ் - நிதி / Fax - Finance: (+94)-11-2449823
කාර්යාලය - ජනමාධ්‍ය / அலுவலகம் - வெகுசன ஊடக / Office - Mass Media: (+94)-11-2513459, (+94)-11-2513498, (+94)-11-2512324
ෆැක්ස් - ජනමාධ්‍ය / பெக்ஸ் - வெகுசன ஊடக / Fax - Mass Media: (+94)-11-2513458
වෙබ් අඩවි / வெப் சைட்கள் / Websites: www.treasury.gov.lk, www.media.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: TIP/SS/01/03
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2018.06.08

**வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம்: 01/2018(1)**

சனாதிபதி செயலாளர்
பிரதமரின் செயலாளர்
அமைச்சரவையின் செயலாளர்
ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்
அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களங்களின் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்டமுறை நிறுவனங்களின் தலைவர்கள் யாவருக்கும்

**<u>சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்கும் திட்டம்</u>**

சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் தொடர்பிலான 2018.02.15 ஆந் திகதிய வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 01/2018 இன் பிரிவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இத்தால் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

1. "பிரிவு 2.1" நீக்கப்படுகின்றது.

2. "பிரிவு 2.6" நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கீழுள்ள பிரிவு சேர்க்கப்படுகின்றது.

   "2.6 இதற்கு முன்னர் ஏதேனுமொரு சலுகை ரீதியிலான மோட்டார் வாகன அனுமதிப்பத்திர திட்டமொன்றின் கீழ் மோட்டார் வாகனமொன்றைப் பெற்றிருப்பின் அதனை இறக்குமதி செய்வதற்காக கடன் பத்திரம் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து / உள்நாட்டில் பொருத்தப்பட்ட மோட்டார் வாகனமொன்றை பெறுவதற்காக ஆரம்ப கொடுப்பனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஐந்து (05) வருட செயலூக்க சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாதுள்ள உத்தியோகத்தர்கள்".

3. "பிரிவு 3.1" நீக்கப்படுகின்றது.

4. "05. செலுத்த வேண்டிய வரி" இன் கீழுள்ள பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கீழுள்ள பந்தி சேர்க்கப்படுகின்றது.

   இந்தச் சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படும் அனுமதிப் பத்திரமொன்றின் மூலம் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல. 01/2018 இன் 04 ஆம் பந்தியில்

குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படும் மோட்டார் வாகனங்கள் / கெப் வாகனங்களுக்காக, "நிதி அமைச்சரினால் உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2018 யூன் மாதம் 08 ஆந் திகதிய 2074/39 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) வர்த்தமானி அறிவித்தலினால் விதிக்கப்பட்டுள்ள மற்றும் அது தொடர்பில் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் மூலம் விதிக்கப்படும் வரி அளவினை இலங்கை சுங்கத்திற்கு செலுத்துதல் வேண்டும்".

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரமொன்றின் மூலம் இறக்குமதி செய்யப்படும் / உள்நாட்டில் கொள்வனவு செய்யப்படும் வாகனங்களுக்கான குறித்த வரிச் சலுகைகள் அவ் வாகனங்களின் மீது விதிக்கப்படும் உற்பத்தி வரி தொடர்பில் மட்டுமே வழங்கப்படுகின்றது.

5. "6.II உரிமை மாற்றல்" இன் கீழுள்ள 6.II.அ, 6.II.ஆ மற்றும் 6.II.இ பிரிவுகளைத் தொடர்ந்து 6.II.ஈ என கீழுள்ள பந்தி சேர்க்கப்படுகின்றது.

   "**6.II.ஈ.** இச்சுற்றறிக்கையின் [வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல. 01/2018(1)] பிரகாரம் வழங்கப்படும் அனுமதிப் பத்திரமொன்றின் மூலம் இறக்குமதி செய்யப்படுகின்ற / உள்நாட்டில் கொள்வனவு செய்யப்படுகின்ற மோட்டார் வாகனமொன்றை / கெப் வாகனமொன்றை அதன் உரிமையாளரின் கோரிக்கையின் பேரில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வேறொருவருக்கு மாற்றுவதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அவர்களுக்கு முடியும்.

   அதேபோன்று அனுமதிப்பத்திர பெறுநர் மரணித்திருப்பின் வாகனத்தின் உரிமையை மாற்றுவதற்காக செய்யப்படும் கோரிக்கை தொடர்பாக நடைமுறையிலுள்ள சட்ட விதிமுறையின் கீழ் உரிமை மாற்றல் நடவடிக்கை எடுப்பதற்கு மோட்டர் வாகனப் போக்குவரத்து ஆணையாளருக்கு அதிகாரம் உள்ளது"

6. 8.4 ஆம் பந்தியிலுள்ள பிரிவுகளைத் தொடர்ந்து கீழுள்ள பிரிவு சேர்க்கப்படுகின்றது.

   "வழங்கப்படும் அனைத்து அனுமதிப்பத்திரங்களினதும் விபரங்கள் MS Excel மூலம் கீழுள்ள மாதிரிக்கிணங்க தயாரிக்கப்பட்டு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட தினத்தன்றே இத்திணைக்களத்தின் permitinfo@tipd.treasury.gov.lk எனும் மின்னஞ்சல் (E-Mail) முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்".

| அனுமதிப்பத்திர இலக்கம் | அனுமதிப்பத்திர பெறுநரின் பெயர் | தேசிய ஆளடையாள அட்டை இல. | பதவி | திணைக்களம் / நிறுவனம் | அமைச்சு /மாகாண சபை |
|---|---|---|---|---|---|
| T/45/VE… | | | | | |

7. இணைப்பு I இல் காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் அனுமதிப்பத்திரத்தை இலக்கமிடுதல் வேண்டும்.

8. இணைப்பு II இல் நிறுவனங்களுக்குரிய இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது.

9. இணைப்பு III இல் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப் படிவம் (ஆங்கில மொழியிலுள்ள விண்ணப்பப் படிவம்) மூலமாக மட்டுமே இதற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

10. அனுமதிப்பத்திரத்தின் மாதிரி இணைப்பு IV இல் காட்டப்பட்டுள்ளது.

இந்த திருத்தங்கள் 2018.06.09 ஆம் திகதி முதல் செயல்வலுப் பெறுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட திருத்தங்களுக்கு உட்பட்டு வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 01/2018 இன் ஏனைய சகல ஏற்பாடுகளும் வித்தியாசம் இன்றி தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்.

**ஒப்பம்./ ஆர்.எச்.எஸ். சமரதுங்க**

**பொதுத் திறைசேரியின் செயலாளரும்**

**நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரும்**

பிரதிகள்:

| | | | |
|---|---|---|---|
| 01. | கணக்காய்வாளர் அதிபதி | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 02. | மத்திய வங்கியின் ஆளுநர் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 03. | பணிப்பாளர் நாயகம், வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை | - | மேற்குறிப்பிட்ட முறையில் நடவடிக்கை எடுப்பதற்காக |
| 04. | பணிப்பாளர் நாயகம், அரசிறைக் கொள்கை | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 05. | பணிப்பாளர் நாயகம், இலங்கை சுங்கம் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 06. | பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 07. | பணிப்பாளர் நாயகம், பொதுத் தொழில்முயற்சிகள் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 08. | ஆணையாளர் நாயகம், மோட்டார் வாகன போக்குவரத்து | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 09. | ஆணையாளர் நாயகம், உள்நாட்டு இறைவரி | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 10. | பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ கணக்காய்வு | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |